Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4-50

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி மீ 26 உ புதன்கிழமை (10-07-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 21

# பேச்சுக்கான வாய்ப்பு இப்போதைக்கு இல்லை!

## கொழும்பு வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, ஜூலை 10

விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையில் சமாதானப் பேச்சுகள் ஆரம்பமாவதற்கான வாய்ப்புகள் ஏதும் இப்போதைக்கு இல்லை. கொழும்பு அரசியல் வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

தமிழகத்தில் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டமை, கொழும்பு கூட்டுப்படைத் தலைமையகம் மீதான தற்கொலைப் படையின் வெடிகுண்டுத் தாக்குதல்கள் என்பன பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியிருப்பதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

சமாதானப் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்க ஸ்ரீலங்கா அரசு விரும்புகிறது. ஆனால் தற்போதைய சூழ்நிலை அந்த வழியை நாடச்செய்யாமல் அரசைத் தடுக்கிறது என்றும் அதே வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

பேச்சுக்கான பூர்வாங்க ஏற்பாடுகளை தற்சமயம் மேற்கொண்டால் தீவிரவாதத்துக்கு ஸ்ரீலங்கா அரசு பயந்துபோய்விட்டதான ஒரு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ராஜீவ் கொலைச் சம்பவம்; இரு ஈழ அகதிகளும் கைது!

சென்னை, ஜூலை 10

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக மேலும் இரண்டு ஈழத் தமிழர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்று பி. ரி. ஐ. செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது.

ஈழ அகதிகளான இவர்கள் இருவரும் விஜயன் [26 வயது] அவரது மாமனாரான பாஸ்கரன் ஆகியோர் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர்களிடமிருந்து வயர்லெஸ் கருவி ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

தேடப்பட்டு வரும் ஒற்றைக் கண் சிவராசனுக்கு கடந்த சில நாட்களாக் சென்னையில் ஒரு வீட்டில்

( 4ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் பகுதியில் மீண்டும் இராணுவ நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 10

வடக்கு - கிழக்கில் கடந்த இரண்டு வாரங்களாக நிறுத்தப்பட்டிருந்த இராணுவ நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கை நேற்று முதல் மீண்டும் ஆரம்பமாகியுள்ளதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என்று செய்தி ஸ்தாபனங்கள் தெரிவித்தன.

இதேவேளை—

மன்னார்த்தீவு நீங்கலாக, மன்னார் மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் நேற்றுக் காலை 9 மணி முதல் ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப் பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. (ஓ-எ)

## பிரெஞ்சு வைத்தியர்கள் மந்திகை வந்து சேர்ந்தனர்

மந்திகை ஆஸ்பத்திரியில் தமது சேவையைத் தொடர்ந்து மேற்கொள்வதற்காக பிரெஞ்சு வைத்தியக் குழுவின் (எம். எஸ். எப்.) பிரதிநிதிகள் ஐவர் நேற்று பருத்தித்துறை வந்தடைந்தனர்.

தாண்டிக்குளம் தாக்குதல் சம்பவத்தின் பின்னர் கடந்த சில மாதங்களாக மந்திகை ஆஸ்பத்திரியில், பிரெஞ்சு வைத்தியக் குழுவினர் சேவையாற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மடு அகதி முகாமில் சேவையாற்றுவதற்கென மேலும் இரு (எம். எஸ். எப்) டாக்டர்களும், இரு தாதியரும் நேற்று அங்கும் போய்ச் சேர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-3-5)

## கப்பல் மூலம் பொருள்; கூ. சங்கங்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 10

கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான பொருள்களைக் கொழும்பில்இருந்து கொண்டு வருவதற்கு கப்பல் வசதி செய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட ப. நோ. கூ. சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யாழ். கூட்டுறவு சபை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பிரஸ்தாப கூட்டத்திற்கு திரு. சி. சிவமகாராசா தலைமை வகித்தார்.

நிவாரணப் பொருள்களை கொண்டுவரும் கப்பல்களுக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அப்ப... பிரிட்டன், தாய்வான் எண்டு லடாய் பட்டியல் நீளும் போலை...!

## நேற்று பரவலாக ஹெலி வேட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 10

குடாநாட்டில் சில பகுதிகளில் நேற்று ஹெலி தாக்குதல்களை நடத்தியது.

நேற்று மாலை 4.30 மணியளவில் வலி. வடக்கில் தெல்லிப்பளை, மல்லாகம், புன்னாலைக்கட்டுவன் பகுதிகளிலும் —

மாலை 5 மணியளவில் நாவற்குழி, கைதடிப் பகுதிகளிலும் ஹெலி வேட்டுக்களைத் தீர்த்தது. [ஓ-15]

## ஆனையிறவில் ஒரே குண்டு வீச்சு!

நேற்று முன்தினம் காலை முதல் நேற்று மாலைவரை— தொடர்ந்து இரு நாட்களாக ஆனையிறவு முகாம் சுற்றுப்புற பகுதிகளில் விமானத் தாக்குதல்கள் நடந்த வண்ணம் இருக்கின்றன.

அவ்ரோ விமானம், பொம்மர்கள், நான்கு ஹெலிகள் மாறி, மாறி தாக்குதல்களை நடத்துகின்றன. இரு நாட்களும் பெரும் எண்ணிக்கையான குண்டுகள் இப்பகுதிகளில் வீசப்பட்டுள்ளன.

நேற்று இயக்கச்சி, சங்கத்தார் வயல் ஆகிய பகுதிகளிலும் அனேக குண்டுகள் போடப்பட்டன.

இதேசமயம், முகாமில் இருந்து ஷெல் தாக்குதல்களும், தொடர்ச்சியான துப்பாக்கி வேட்டுக்களும் நடத்தப்படுகின்றன. (ஓ-117-5-15)

## மட்டக்களப்புப் பகுதியில் 3 தமிழர்கள் படுகொலை

யாழ்ப்பாணம், ஜூலை 10

மட்டக்களப்பு மாவட்டம் உப்போடை, 40 ஆம் கிராமம், தும்மன்கேணி ஆகிய பகுதிகளில் கடந்த ஞாயிறன்று இராணுவத்தினரும் ரெலோவினரும் கூட்டாக மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது 3 தமிழர்கள் சுட்டும், வெட்டியும் கொலை செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வேலாயுதம் தேவகுமரன் (வயது 19), கணபதிப்பிள்ளை செல்வநாயகம் (வயது 17) ஆகிய இரு இளைஞர்களும், நான்கு பிள்ளைகளின் தந்தையான குமாரசாமி கிருஷ்ணபிள்ளை (வயது 37) என்பவருமே கொலையுண்டவர்கள் ஆவர். (ஓ-5)

## ரொக்கட், ஆயுதங்கள் பறிமுதல்: ஸ்ரீலங்கா அரசு மீது தாய்வான் வழக்குத் தாக்கல்

தைப்பே, ஜூலை 10

தாய்வான் நாட்டு பாதுகாப்பிற்காக பெல்ஜியத்தில் இருந்து வாங்கி வரப்பட்ட ரொக்கட் ஆயுத பாகங்களை ஸ்ரீலங்கா அரசு பறிமுதல் செய்திருப்பது ஸ்ரீ லங்காவின் பாதுகாப்பைப் பாதிக்கும் என்று தாய்வான் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

பெல்ஜியம் கப்பல் 'மாதலினா' வில் கொண்டு வரப்பட்ட 10 கோடி ரூபா பெறுமதியான ரொக்கெட் மற்றும் மோட்டார் ஆயுதங்களை அண்மையில் ஸ்ரீலங்கா சுங்கத் திணைக்களம் பறிமுதல் செய்தது தெரிந்ததே.

இந்நடவடிக்கையை எதிர்த்து தாய்வான் அரசு ஸ்ரீலங்கா அரசுமீது சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்திருப்பதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன. (ஓ-எ)

## தமிழ்க் குழுக்கள் தயாரித்த 8 அம்ச அடிப்படைத் திட்டம்

கொழும்பு, ஜூலை 10

★ சுயாட்சி அதிகாரம் கொண்ட மாநில சபைகள் அமைக்கப்பட வேண்டும்.

★ வடக்கு — கிழக்கு இணைந்த பிரதேசம் தமிழ் மொழி மாநிலமாகப் பிரகடனப்படுத்தப்பட வேண்டும்.

★ ஸ்ரீ லங்கா ஜனநாயக சோசலிசக் குடியரசு மாநில சபைகளின் ஒன்றியமாக விளங்க வேண்டும்.

இவ்வாறு [illegible] சர்வகட்சி மாநாட்டின் மூலம் ஜனாதிபதி பிரேமதாசாவிடம் கடந்த மாதம் சமர்ப்பிக்கப்பட்ட எட்டு அம்ச அடிப்படைத் திட்டம் ஒன்றில் மேற்கண்ட விவரங்கள் அடங்கியுள்ளன.

சர்வகட்சி மாநாட்டில் பங்குபற்றிய நான்கு தமிழ்க் குழுக்கள் இந்தத் திட்டத்தை கூட்டாகச் சமர்ப்பித்துள்ளன.

ஜனாதிபதி இந்த அடிப்படைத் திட்டத்தைப் பரிசீலித்த பின்னர், சர்வகட்சி மாநாட்டின் திட்ட வரைவுக் குழுவிடம் [Drafting Committe] அதனைச் சமர்ப்பித்துள்ளார் என்று தெரியவருகிறது.

அரசாங்கம் தனது சொந்தத் திட்டம் எதனையும் வரைவுக் குழுவிடம் வழங்காமல், மேற்கண்ட எட்டு அம்சத் திட்டத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு ஒரு நகல் தீர்வைத் தயாரிக்குமாறு கேட்டுள்ளது.

நகல் தீர்வு தயாரிக்கப்பட்ட பின்னர் அரசாங்கம் அது குறித்து விவாதித்து ஒரு முடிவுக்கு வர முடியும் என்று ஜனாதிபதி கூறியதாக அறிய வந்துள்ளது.

ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்

[4-ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல இன ஜேசி இனப்பால் மாடு பாறி இனப் பசுக்களுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு 51, சிவன்கோவில் றோட், திருநெல்வேலி.
(4191)

ஆங்கில உதவி ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி (Engl sh Teachers Exam Guide) வெளிவந்து விற்பனையாகிறது. நடைபெற்ற 5 வருட மாதிரி வினா-விடைகளுடன் 15 கட்டுரைகளும், கடிதங்களும் அடங்கியவை. அஸ்ரன் வெளியீடு, விலை 79/- (எல்லாப் புத்தக சாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம் ) (சி/0197)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

கொடிகாமம் ரயில்வே நிலையப் பகுதியில் பொதிகள் அடங்கிய பை ஒன்று கண்டெடுக்கப்பட்டு கொடிகாமம் வர்த்தகர் சங்கத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரிமையாளர்கள் தகுந்த ஆதாரங்களோடு அதனைப் பெற்றுக்கொள்ளலாம. வர்த்தகர் சங்கம், கொடிகாமம்.
(17428)

### வாடகை & விற்பனை

வீடு வாடகைக்கு கொடுக்கப்படும் அத்துடன் மலிவு விலையில் ஒரு சுசில் (F)பிறிஜ், ஒரு அலுமாரி என்பன விற்பனைக்குண்டு. விவரங்களுக்கு இல: 17, மாட்டீன் றோட், யாழ்ப்பாணம்.
[4194]

### பைண்டிங்

உங்களது பெறுமதிமிக்க புத்தகங்கள் மற்றும் தொகுப்புகள் அனைத்தும் மிகவும் அழகான முறையில் கட்டிக் கொடுக்கப்படும். கூடுதலாகக் கட்டும் நூலகம், கல்லூரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். பூபாலசிங்கம் புத்தகசாலை, 255, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(சி/0199)

### உடன்தேவை

ஓடு, அஸ்பெற்றோ சீற் உடன் தேவைப்படுகிறது. தொடர்பு 51, சிவன்கோவில் றோட், திருநெல்வேலி.
(4192)

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்த நோவு எண்ணெய் எஸ் ரீ மெடிக்கல்ஸ், 497, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். [4156]

### பயிற்சி வகுப்பு

யாழ் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரினால் 27 பேர் சுகாதாரத் தரிசிப்பாளர் பயிற்சி நெறிக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்டோர் அனைவரும் இம்மாதம் 15 ஆம் திகதி பயிற்சி நெறிக்காக இணுவில் ஆஸ்பத்திரிக் கட்டடத்தில் இயங்கும் தெல்லிப்பளை சுகாதாரப் பயிற்சி நிலையத்துக்கு வருமாறு கோரப்பட்டுள்ளனர்.
[இ-18]

ஊர்காவற்றுறை துயர் துடைப்புச் சங்கம்

## விசேட பொதுக்கூட்டம்

இடம்: யாழ்/புனித சாள்ஸ் மகா வித்தியாலயம் யாழ்ப்பாணம்.

காலம்: 21-07-1991ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணி.

நிகழ்ச்சி நிரல்:

1. இறை வணக்கம்,
2. [அ] தலைமையுரை
   அருட்திரு. கிருபானந்தன் அடிகளார்,
   [ஆ] சிறப்புரை (த.வி.பு.ம.மு. உறுப்பினர்),
3. அரையாண்டு அறிக்கை,
4. கணக்கறிக்கை,
5. யாப்பு அங்கீகரித்தல்,
6. புதிய செயற்குழு தெரிவு,
7. வேறு விடயங்கள்.

சங்கப் பொதுச் சபை அங்கத்தினர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

(17431) - உப செயலாளர்.

## விசர்நாய்க்கடி மருந்து இல்லை

தென்மராட்சி, ஜூலை10 சாவகச்சேரி ஆஸ்பத்திரியில், விசர்நாய்க்கடிக்கு ஏற்றப்படும் ஏ. ஆர். வி. ஊசி மருந்து இல்லாததால் சிகிச்சை பெற வரும் நோயாளர்கள் ஏமாற்றம் அடைகின்றனர்.

பெரும் சிரமத்தின் மத்தியில் அவர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு செல்லவேண்டிய நிலை இருந்து வருகிறது.

கடந்த மாதம் இப்பகுதியில் 76 பேர் நாயினால் கடியுண்டனர். இவர்களில் 17 பேர் விசர்நாயினால் கடியுண்டனர் என்று வைத்திய அறிக்கைகள் தெரிவிக்கின்றன.
[இ-117[

உ

சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரசோற்பத்தி வருஷம் ஆனி மாதம் 28 ஆம நாள் (12 - 07 - 1991) வெள்ளிக்கிழமை முற்பகல் 9-36 மணி முதல் 10-48 மணி வரையுள்ள சுப முகூர்த்தத்தில்,

சாவகச்சேரி திரு. வி சின்னையா தம்பதிகளின் புத்திரன் திருநிறை செல்வன் **பாலநாதன்** (Water Resources Board, Jaffna.) அவர்களுக்கும்

நல்லூர் திரு. கா. உருத்திராபதி தம்பதிகளின் ஏக புத்திரி திருநிறை செல்வி **கல்பனாபதி** அவர்களுக்கும்

திருவருள் துணை கொண்டு திரு மாங்கல்யதாரணம் நடைபெற இருப்பதால அத தருணம சுற்றத்தவர்கள், நண்பாகள், நலமை விருமபியவாகள குடும்பசகிதம வருகை தந்து ஆசீர்வதித்தேகுமாறு பணிவன்புடன அழைககின்றோம்.

திருமணம் நிகழும் இடம்:-
திவ்ய ஜீவன சங்க மண்டபம்
(சட்டநாதர் கோவிலுககு அருகாமையில்)
நல்லூர்.

★ இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. திருமதி வி. சின்னையா
(பிரசித்த நொததாரிஸ்)
''சிவபதி''
சங்கததானை,
சாவகச்சேரி.

திரு. திருமதி கா. உருத்திராபதி
(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)
28, நாயன்மார் வீதி,
நல்லூர்.

[தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை]
[17433]

உ

சுன்னாகம்

ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தான மகோற்சவ

# தேர்த் திருவிழா

இன்று காலை 10-00 மணி

தேரேறிவரும் பெம்மானின்
திருவடி தொழுவோம்


புதிதாக செய்யப்பட்ட சித்திரத்தேர்
பவனியால் அனைவருக்கும்

சொர்ணாம்பிகை சமேத
பொன்னம்பலவாணசுவாமியின்

திருவருளால்

அமைதியும், நிறைவும்,
சாந்தியும் உண்டாவதாக

''போகர் சுவாமியின் வருகை பல பெற்ற திருப்பதியாம் கதிரமலையில், யாகம் பல செய்து சிறந்த கதிர மலையில், மஹரிகள் பல இசைபட அசையும் சித்திரத் தேரால் வினைகள் பலவும் நீங்க தியானிப்போம்''





மலர் ஆக்கம்:

லக்ஷமி விலாஸ்,

கே. கே. எஸ். வீதி,

சுன்னாகம்.

உ

ஸ்ரீ குருப்பியோ நம

## உபநயன வைபுவ அழைப்பு

(பூணூல் அணிதல்)

அன்புடையீர்!

ஸ்ரீ பார்பதி சமேத பரமேஸ்வரர் கிருபையை முன்னிட்டு நிகழும் மங்களகரமான பிரசோற்பத்தி ஆண்டு ஆனி மாதம் 28 ஆம் திகதி (12 - 07 - 91) வெளளிக்கிழமை பகல் 12-00 மணிககு வரும் பிரதமைத திதியும், புனர்பூச நட்சத்திரமும் சேர்ந்த கனனி லக்கின சுபமுகூர்த்தததில்,

எமது சிமந்த புத்திரன்

**சிரஞ்சீவி இரத்தினபவசர்மா**

அவர்களுக்கு

சௌள உபநயன பியம்மோபதேச வைபவம் நடைபெறத் திருவருள் பாலிததுள்ளமையால தாங்கள் குடும்ப சகிதம் சமுகம் தந்து செல்வனை ஆசீர்வதித்துச் சிறபபிக்குமாறு வேண்டுகிறோம்.
சுபம்.

மேற்படி உபநயன வைபவம்
நல்லூர் சிவன் கோவில் மண்டபத்தில் நடைபெறும்.

இங்ஙனம்:

சிவஸ்ரீ ந. மகேஸ்வரக் குருக்கள்,

ஸ்ரீ வீரகத்தி விநாயகர், தேவஸ்தானம், நுழைவாயில், புங்குடுதீவு - 8.

பவானி தம்பதிகள், ஸ்ரீ முருகன் கோவில், வங்களாவடி, வேலணை.

(17421)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### யார் குற்றியும் அரிசியாகட்டும்

ஸ்ரீலங்காவிலிருந்து பிரிட்டிஷ் தூதுவர் திரு. கிளாட்ஸ்ரோன் வெளியேற்றப்பட்ட விவகாரம் ஐ. நா. வரை எடுத்துச் செல்லப்பட உள்ளதாகச் செய்திகள் வந்துள்ளன. கிளாட்ஸ்ரோனின் வெளியேற்றத்தை ஏற்கனவே கண்டித்த ஐரோப்பிய சமூக நாடுகளே, அனேகமாக, இது விடயத்தை ஐ. நா.வில் சர்வதேச மயப்படுத்த உள்ளதாகவும் ஊகிக்கப்படுகிறது.

உள்நாட்டு விவகாரத்தில் தலையிட்டதாலேயே கிளாட்ஸ்ரோனை வெளியேற்றியதாகவும், மனித உரிமை மீறல்களைச் சுட்டிக்காட்டியதால் அல்ல என்றும் ஸ்ரீலங்கா அரசு எவ்வளவு தான் கூறிச் சமாளிக்க முயன்ற போதிலும், பிரிட்டன் பழிக்குப்பழி வாங்காமல் இருக்கப் போவதில்லை என்பது தெரிகிறது.

கிளாட்ஸ்ரோன் வெளியேற்றப்பட்டது குறித்து தாம் பெரிதாக மனங்கோணவில்லை என்று பிரிட்டன் வெளியில் காட்டிக்கொண்டாலும், அதற்கேற்ப நடித்துக் கொண்டாலும், உள்ளூர ஆத்திரம் இல்லாமலா போகும்?

லண்டனில் உள்ள ஸ்ரீலங்காத் தூதுவர் சேபாலா ஆட்டிகலையை, பிரிட்டிஷ் வெளிவிவகாரச் செயலாளர் நேரில் அழைத்துப் பேசியபோது, உதவிகளை நிறுத்துவது குறித்தும், ஆயுதங்கள் விற்பதனை நிறுத்துவது குறித்தும் மட்டும் கூறவில்லை. பிரிட்டனின் குரல் ஸ்ரீலங்காவில் தொடர்ந்து ஒலிக்கும் பொருட்டு, விசேடமாக மனித உரிமை விவகாரங்கள் சம்பந்தமாக ஓங்கி ஒலிக்கும் பொருட்டு கிளாட்ஸ்ரோனுக்குப் பதிலாக புதியவர் ஒருவரை நாம் விரைவில் நியமிப்போம் — என்றும் எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது!

அதாவது கிளாட்ஸ்ரோன் வெளியேற்றப்பட்டதற்கு, ஸ்ரீலங்கா கூறிய காரணத்தை பிரிட்டன் உண்மையாகவே ஏற்றுக் கொள்ளவில்லை, ஆனால் ஏற்றுக் கொண்டதாகக் காட்டிக் கொண்டு மனித உரிமைகள் விவகாரத்தில் ஸ்ரீலங்காவின் சூத்தையை உலகத்துக்குத் திறந்து காட்டி வஞ்சம் தீர்க்க நினைத்திருக்க வேண்டும்,

அதன் பொருட்டு, ஸ்ரீலங்கா அரசின் அங்கங்களான படைகளும், நிர்வாக அதிகாரிகளும் மனித உரிமைகளை மீறி வருவது குறித்து தான் முன்னின்று முறைப்பாடு செய்யாமல் ஐரோப்பிய நாடுகள் மூலம் பிரச்சினையைக் கிளப்ப முடிவு செய்திருக்கலாம்.

எனவே புதிய தூதுவர் கொழும்பு வந்ததும் ஸ்ரீலங்காவில் நடந்த, நடக்கும் மனித உரிமை மீறல்கள் பற்றிய விவரங்களைத் திரட்டுவார் என்பது நிச்சயம்.

தமிழர்களைப் பொறுத்தவரையில் 1974 ஆம் ஆண்டு உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் வைத்து பொலிஸார் தமிழர்களைச் சுட்டுக் கொன்றது தொடக்கம். கடந்த மாதம் கொக்கட்டிச்சோலையில் நடந்த இராணுவப் படுகொலை வரை, புதிய பிரிட்டிஷ் தூதுவருக்குத் தகவல். தரவு கொடுக்க வேண்டும்.

அவர் மூலம் தமிழர்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுவது சம்பந்தமான முழுமையான தகவல்கள் ஐ. நா. வைச் சென்றடைய வேண்டும். அவ்வாறு அம்பலத்துக்கு வந்தால் தமிழர்களின் உரிமைப் போராட்டம் எந்த அளவுக்கு நியாயமானது என்பதை உலக நாடுகள் உணர்ந்து கொள்ள, புரிந்து கொள்ள ஓர் ஊற்றுக் கண்ணாக அமையும். நெல்லை யார் குற்றினாலும், அது அரிசியாகக் கிடைக்க வேண்டும் என்பதே முக்கியம்!

ராஜீவ் கொலை:

# விசாரணை நடக்கும் கட்டடமும் தாக்கப்படலாம் என அச்சம்

## பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டன

சென்னை, ஜூலை 10

சென்னையில் ராஜீவ் கொலை குறித்து விசாரணை நடந்து வரும் கட்டடத்தை ஈழப் போராளிகளின் தற்கொலைப்படை குண்டு வைத்துத் தகர்க்கத் திட்டமிட்டிருப்பதாகத் தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் —

இதையடுத்து அக்கட்டடத்துக்குப் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் சென்னைப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

சென்னை கிரீன்வேய்ஸ் வீதியில் அமைச்சர்கள், நீதிபதிகள் தங்கும் பங்களாக்களுக்கு நடுவே உள்ள ''மல்லிகை'' என்ற தனி பங்களாவில் இந்த விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. இங்குதான இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தும் சி. பி. ஐ அதிகாரிகள் தங்கியுள்ளனர் விசாரணை தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டவர்களும் இங்கு வைத்துத்தான் விசாரிக்கப்பட்டு வருகிறார்கள்.

இக்கட்டடம் தற்கொலைப் படைத் தாக்குதலுக்கு இலக்காகக்கூடும் எனச் செய்திகள் வெளியானதை அடுத்து அப்பகுதியில் பாதுகாப்புக் கெடுபிடிகள் தீவிரமாக்கப்பட்டிருக்கின்றன.

(உ)

### முறைசாரா கல்விப் பிரிவு மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 10

வேலணை வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலயத்தில் முறைசாராக் கல்வியில் உடையமைத்தல், தமிழ், ஆங்கிலச் சுருக்கெழுத்துத் தட்டெழுத்துப் பாடநெறிகளில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கான கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு யாழ் கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவில் நடைபெறும்.

★ ★ ★

யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் முறைசாராக் கல்விப் பிரிவில் பத்திரிகைத் துறைப் பயிற்சி பெற்ற மாணவர்களின் கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ். கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவில் நடைபெறும் தமக்கு வழங்கப்பட்ட ஒப்படைகளைப் பூரணப்படுத்திக் கொண்டு வருமாறு மாணவர்கள் கோரப்பட்டுள்ளனர்.

(இ)

### தட,கள போட்டி கலந்துரையாடல்

திலீபன் நினைவு தட,கள (மெய்வல்லுநர்) போட்டிகள் சம்பந்தமான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கு சோண்டாவிலில் உள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ் மாவட்டச் செயலகத்தில் நடைபெறும்.

சகல விளையாட்டு உத்தியோகத்தர்கள், இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள், வட்டவை ரீதியாக நியமிக்கப்பட்ட விளையாட்டுப் பொறுப்பாளர்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டுக் குழு உறுப்பினர்கள் தவறாது சமூகம்கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். வரும்போது தட,கள போட்டிகளுக்கான விண்ணப்பங்களையும் கொண்டு வருமாறும் கோரப்பட்டுள்ளது.

[இ]

### அரபாத் தயார்

இஸ்ரவேலுடன் நேரடிப் பேச்சுக்கள் நடத்தத் தயாராக இருப்பதாக பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் அறிவித்தார்.

### சபாநாயகர் பதவிக்கு சிவராஜ் பட்டீல்

புதுடில்லி, ஜூலை 10

சபாநாயகர் பதவிக்கு இந்திரா காங்கிரஸ் சார்பில் திரு. சிவராஜ் பட்டீல் நிறுத்தப்படுவார் என்று பிரதமர் நரசிம்மராவ் நேற்று அறிவித்தார்.

திரு. யஷ்வந்த் சின்ஹாவை சபாநாயகர் பதவிக்கு தாம் நிறுத்துவதாக பாரதிய ஜனதா கட்சி அறிவித்துள்ளது. இத்தகவலை கட்சித் தலைவர் எல். கே. அத்வானி வெளியிட்டார்.

திரு. ரபிராய் இப்பதவிக்கு தமது வேட்பாளராக போட்டியிடுவார் என தேசிய முன்னணி (இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சிகள் உட்பட) அறிவித்துள்ளது தெரிந்ததே.

இதேவேளை- சபாநாயகர் பதவிக்கு காங்கிரஸ் வேட்பாளரை ஆதரிக்கும்படி மத்திய அமைச்சர்கள் அர்ஜுன் சிங், எஸ். பி. சவான் ஆகியோர் தேசிய முன்னணித் தலைவர் வி பி. சிங்கைச் சந்தித்து கோரினர். அக்கோரிக்கையை ஏற்க திரு. சிங் மறுத்துவிட்டார்.

இன்று (புதன்) புதிய சபாநாயகர் தெரிவு நடைபெறுகிறது.

(இ-எ)

# வரதனை நித்திரையில்வைத்து கைது செய்யும் முயற்சி கைகூடவில்லை

கொழும்பு, ஜூலை 10

நித்திரையில் இருந்த வரதனை பொலீஸார் உயிருடன் கைது செய்ய முயற்சித்த போதும் அவர் மிகச் சாதுரியமாகப் பொலீஸாரை ஏமாற்றி விட்டு சயனைட் வில்லையை உட்கொண்டார்.

கொழும்பு கூட்டுப்படைத் தலைமையக குண்டு வெடிப்பின் சூத்திரதாரி எனக் கருதப்படும் வரதன் பிடிபட்டது தொடர்பாக, பொலீஸார் வெளியிட்டுள்ள தகவல்களிலிருந்து இது தெரியவந்துள்ளது.

பொலீஸார் தன்னைத் தேடுவதை அறிந்த வரதன் தலவாக்கலைக்குத் தப்பிச் செல்ல முடிவு செய்தார் என்றும், அவர் தப்பிச் செல்ல சோடாப் போத்தல்களைக் கொண்டு செல்லும் லொறி ஒன்றைப் பயன்படுத்தினார் என்றும், சோடாப் போத்தல்கள் அடங்கிய பெட்டிகள், ஒருவர் மறைந்து இருக்கக் கூடியவாறு லொறியின் பின் பகுதியில் அடுக்கப்பட்டன என்றும், ஜூன் 27ஆம் திகதி அவர் தலவாக்கலைக்குத் தப்பிச் சென்றார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவர் தப்பியது பற்றித் துப்புக் கிடைத்துப் பொலீஸார் ஜூலை 3ஆம் திகதி தலவாக்கலை சென்றனர் என்றும் வரதன் கொட்டகலை தோட்டம் ஒன்றில் மறைந்திருப்பதாக அவர்களுக்குத் தகவல்கள் கிடைத்தன என்றும் கூறப்படுகிறது.

அன்றிரவு பொலீஸார் சாதாரண உடையில், தமக்கு துப்புக் கொடுத்த இருவர் சகிதம் கொட்டகலை விரைந்தனர்.

தகவல் கொடுத்தவரில் ஒருவர் வரதன் தங்கியிருந்த வீட்டுக்குச் சென்று ''வரதன் கதவை திற'' என்று தமிழில் குரல் கொடுத்தாராம். அதனைத் தொடர்ந்து பெண் குரல் ஒன்று முன் கதவு பூட்டப்பட்டுள்ளதாகவும், பின் பக்கம் வரும்படியும் கூறியது என்று தெரிவிக்கப்படுகிறது.

அந்தப் பெண் கதவு திறந்ததும் பொலீஸார் உள் பாய்ந்தனர். அந்த நேரத்தில் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த வரதனின் அறையை அடைந்த பொலீஸ்காரரில் ஒருவர் வரதனின் ஒரு கையைப் பிடித்துக் கொண்டார். மற்றக் கையைப் பிடிக்க முன் விழித்துக் கொண்ட வரதன் பொலீஸ்காரரைத் தாக்கிவிட்டு சயனைட் வில்லையை உட்கொண்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-த)

### லூதர் ஜெயசிங்கம் பொது அறிவுப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 10

பேராசிரியர் லூதர் ஜெயசிங்கம் வெற்றிக் கிண்ணத்துக்கான பொது அறிவுப் போட்டி ஒன்றை யாழ். றோட்டரக்ட் கழகம் யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே நடத்துகிறது.

அரை இறுதிப் போட்டி இன்று புதன்கிழமை காலை 9-30 மணிக்கு சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், யாழ்ப்பாணம் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த தலா இரண்டு பாடசாலைகள் இப்போட்டியில் பங்குபற்றுகின்றன.

(இ)

சட்டவிரோதமாக

# பிரான்ஸில் வசிப்பவர்கள் மீது புதிய அரசு கடும் நடவடிக்கை

பாரிஸ், ஜூலை 10

சட்டவிரோதமாகக்குடியேறியவர்கள் மற்றும் அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்டவர்கள் மீதுகடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இப்படி பிரெஞ்சுப் பிரதமர் திருமதி எடித் கிறெஸ்ஸன் அறிவித்திருக்கிறார்.

வெளிநாட்டுச் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

சட்டவிரோதமாகக் குடியேறுபவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு தற்போதைய சட்டம் உதவுவதாக இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

பிரான்ஸுக்கு சட்டவிரோதமாக வந்து சேருவோர் அங்கு இருக்க உரிமையில்லாதோர் பற்றித் தீர்மானிக்கப்பட்ட உடனேயே அவர்களை விசேஷ விமானத்தில் திருப்பி அனுப்பி வைக்கும் யோசனையையும் பிரதமர் திருமதி கிறெஸ்ஸன் வெளியிட்டார்.

தற்போதைய சூழ்நிலையில் பிரெஞ்சு குடி[illegible] மதிக்கப்படுவதாக இல்லை என்று தெரிவித்த பிரதமர் நாட்டை விட்டு வெளியேறும்படி உத்தரவிடப்பட்ட வெளிநாட்டவரில் 35 சத வீதமானோரே பிரெஞ்சு மண்ணில் இருந்து வெளியேறினார்கள் என்றும் கூறினார்கள்.

விமானமோட்டிகள் தங்கள் விமானங்களில் பயணப் பாதுகாப்பின்மை கருதி சட்டவிரோத குடியேற்றக்காரர்களை ஏற்றிச் செல்ல மறுக்கின்றார்கள் என்றும் பிரதமர் திருமதி கிறெஸ்ஸன் சொன்னார்.

#### சலுகை வழங்க கோரிக்கை

இதேவேளை – 1990 ஆம் ஆண்டு ஜனவரிக்கு முன்னர் பிரான்ஸில் புகலிடம் பெற்ற வெளிநாட்டார் விஷயத்தில் விசேஷ சலுகைகள் வழங்கி அவர்களை தொடர்ந்து பிரான்ஸில் தங்க அங்கீகாரம் வழங்கும்படி சிமாட் (Cimad) எம். ஆர். ஏபி பாஸ்டி (Fasti) ஆகிய மனித உரிமை ஸ்தாபனங்கள் பிரெஞ்சு அரசை கோரியுள்ளன.

கடந்த 5 வருடங்களாக முடிவு எதுவும் இன்றித் தேங்கிக் கிடந்த சுமார் [illegible] ஆயிரம் விண்ணப்பங்களை விசாரணை செய்த OFPRA அமைப்பு அவற்றில் 90சத வீதமான விண்ணப்பங்களை நிராகரித்துவிட்டதாக செய்திஒன்று தெரிவித்தது.

#### உண்ணாவிரதம்

இதனிடையில் தஞ்சம் மறுக்கப்பட்ட பல நாடுகளைச் சேர்ந்த 20 குர்திஸ் மற்றும் துருக்கிய பிரசைகள் பிரான்ஸின் பாலமக் என்னுமிடத்தில் கடந்த ஏப். 8 முதல் 45 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தனர்.

அவர்களைப் பொலீஸார் ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர்.

இப்பிரச்சினையில் மத்தியஸ்தராக இருந்து தீர்க்க திரு. பெர்னாட் புறூன் என்பவரை பிரான்ஸ் அரசு நியமித்திருக்கிறது.

கடந்த 5 ஆண்டுகளுக்கு மேலாக பிரான்ஸில் தங்கியிருக்கும் வெளிநாட்டுப் பிரசைகள், தாங்கள் சொந்த நாடுகளுக்குத் திருப்பி அனுப்பப்பட்டால், தங்களுக்கு உயிராபத்து ஏற்படும் என்று பிரெஞ்சு அரசுக்கு முறையிட்டுள்ளனர்.

(இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராஜீவ் கொலை விசாரணை :

# வரதராஜப்பெருமாளுடன் புலனாய்வுக் குழு தொடர்பு

சென்னை, ஜூலை 10
ராஜீவ் கொலைச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திவரும் மத்திய புலனாய்வுக் குழு அதிகாரிகள் சிலர் வடக்கு, கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாலைச் சந்தித்துப் பேசினர்.

இந்திய அதிகாரிகளின் பாதுகாப்புடன் மத்தியப் பிரதேசம் சந்தேரியில் மலை வாசஸ்தலம் ஒன்றில் தங்கியிருக்கும் வரதராஜப்பெருமாளை புலனாய்வு அதிகாரிகள் அங்கு சென்று சந்தித்தனர்.

ராஜீவ் படுகொலை தொடர்பாகத் தேடப்பட்டு வரும் ஒற்றைக்கண் சிவராஜனின் படத்தை அவரிடம் காட்டி, சந்தேகநபர் பற்றிய தகவல் ஏதும் தெரியுமா என்று கேட்டதுடன் மேற்கொண்டும் சில தகவல்கள் குறித்து அதிகாரிகள் திரு. வரதராஜப்பெருமாளிடம் விசாரித்ததாகச் சென்னைச் செய்திகள் தெரிவித்தன. (உ)

# விசாரணை நடத்துவதற்கு 300 அதிகாரிகள் "படை"!

சென்னை, ஜூலை 10
ராஜீவ் கொலைச் சம்பவம் குறித்து விசாரணை நடைபெற்றுவரும் சென்னை அடையாறு கிரீன்வேஸ் வீதியில் உள்ள மல்லிகை மாளிகையில் மத்திய புலனாய்வு அதிகாரிகள் 300 பேர் முகாமிட்டுள்ளனர்.

இவர்கள் 60 குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு குழுவுக்கும் தனித் தனிப் பொறுப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

மல்லிகை மாளிகையில் ஐம்பது கார்கள் எப்போதும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. பொலீஸ் கட்டுப்பாட்டு அறையில் 20 தொலைபேசிகள் இயங்குகின்றன.

இவை தவிர சென்னையிலிருந்து புதுடில்லிக்கான ''ஹொட் லைன்'' தொலைபேசிகளும்—

எல்லா மாநிலங்களிலும் உள்ள பொலீஸ் மா அதிபர் அலுவலகங்களுடனும் எந்த நேரத்திலும் தொடர்பு கொள்ளக் கூடியதாக மைக்ரோவேவ் தொலைபேசிகளும்—இங்கு இயங்குகின்றன.

ஒரு சிறு தகவல் கிடைத்தாலும் அதனை உடனே விசாரிக்க அதிகாரிகள் காரில் பறந்து செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [உ]


## சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
## வெற்றிடம்

ஜீ. சி. ஈ. உயர்தர வகுப்புகளுக்கு தாவரவியல், பௌதீகவியல், இரசாயனவியல், தூய கணிதம் கற்பிப்பதற்கான ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள் உள்ளன.

தகுதியானோரிடமிருந்து 19 ஜூலை 1991க்கு முன் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

– அதிபர்

[C/0230]


## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு:
22 - 10 - 1960

உதிர்வு:
21 - 06 - 1990

திதி: 10 - 07 - 1991

செல்வன்
### சுப்பிரமணியம் உதயகுமார்
[கௌரி ஸ்ரோர்ஸ், கல்லடி - மட்டக்களப்பு]

திங்களுக்கு ஒளிகொடுக்கும் கதிரவன் போல்
நீங்களன்று
எங்களுக்கு ஒளி கொடுத்து வாழ்வளிக்க
வாழ்ந்து வந்தீர்
உங்களுயிர் பிரிந்ததேனோ எங்களையும்
மறந்தது அன்று
சிங்களத்து கயவனவன் கொல்ல உனை
நினைத்தது ஏன்?

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
ஐயா, அம்மா, அண்ணன்மார்,
தம்பிமார், சகோதரிகள், பேரன்,
பெரியப்பா குடும்பத்தினர்,
மாமா குடும்பத்தினர்.

'பரிமளவாஸா'
அல்லையம்பதி,
துன்னாலை,
கரவெட்டி.

(17414)

## தமிழ்க் குழு...
(1 ஆம் பக்கத் தொடர்ச்)

கப்பட்டு, இப்போது திட்ட வரைவுக் குழுவினால் கையாளப்பட்டு வரும் எட்டு அம்ச அடிப்படைத் திட்டம் வருமாறு:-

★ ஸ்ரீலங்கா சனநாயக சோசலிசக் குடியரசு மாநிலங்கள் கொண்ட ஒன்றியமாக அமைய வேண்டும்.

★ இப்போது இணைக்கப்பட்டுள்ள வடக்கு — கிழக்கு மாகாணம் மேற்சொன்ன பிரதேசங்களின் ஒன்றியத்துக்கு உட்பட்ட தமிழ்மொழி மாநிலமாக அமைக்கப்பட வேண்டும்.

★ மாநிலங்களின் எல்லைகள் மாற்றப்படக்கூடாது.

★ எல்லா மாநிலங்களுக்கும் சுயாட்சி உரிமை வழங்கி, அதனை அரசமைப்புச் சட்டத்தில் உறுதி செய்ய வேண்டும்

மாநில அரசுகளுக்கும், மத்திய அரசுக்கும் உள்ள அதிகாரங்களும் கடமைகளும் வெகு தெளிவாக அரசமைப்புச் சட்டத்திலேயே சேர்க்கப்பட வேண்டும்.

★ தமிழ் மொழி மாநிலத்தில் வாழும் முஸ்லிம் மக்களின் நலன்களைப் பாதுகாக்கும் சரத்துக்கள் அரசமைப்புச் சட்டத்திலேயே சேர்க்கப்பட வேண்டும்.

★ தமிழ் மொழி மாநிலத்தில் வாழும் சிங்களச் சிறுபான்மை மக்களின் நலன்களைப் பாதுகாக்கும் சரத்துக்களும் அரசமைப்புச் சட்டத்தில் இடம்பெற வேண்டும்.

★ ஏனைய மாநிலங்களில் வாழும் மொழிவாரி சிறுபான்மையினரின் சகல உரிமைகளும், நலன்களும் பாதுகாக்கப்படும் விதத்தில் அரசமைப்புச் சட்டத்தில் வசதி செய்யப்பட வேண்டும். [அ]

## கப்பல்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புறம்பாக, ப. நோ. கூ. சங்கங்கள் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டு வருவதற்கு தனியான கப்பல் வசதி செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

யாழ். அரச அதிபர் மூலம் இது குறித்து கொழும்பு அதிகாரிகளுடன் தொடர்பு கொள்வதெனவும் முடிவுசெய்யப்பட்டது. (அ-3)

## ராஜீவ்...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

புகலிடம் அளித்ததற்காகவே விஜயனும், பாஸ்கரனும் விசேட விசாரணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டனர்.

சிவராசன் ஒரு சில நாட்களுக்கு முன்புதான் தகவல் தொடர்பு சாதனம், ஒருதுப்பாக்கி சகிதம் வெளியேறினார் என்று கைது செய்யப்பட்டவர்கள் கூறியதாக விசேட விசாரணைக்குழு தெரிவித்துள்ளது.

ராஜீவ் கொலை தொடர்பாக இதுவரை 8 இலங்கைத் தமிழர் உட்பட மொத்தம் 12 பேர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஒ-எ)

## பேச்சுக்கான...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரமையை சிங்கள மக்கள் மத்தியில் அது ஏற்படுத்தும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனால் தற்போதைய சூழ்நிலையில் பேச்சுக்கான முயற்சிகளில் ஈடுபடுவதில்லை என்று அரசு உயர் [illegible] செய் [illegible] தெரிய வந்தது. (உ)

# உண்ணாவிரதத்தை இராம்தாஸ் கைவிட்டார்

சென்னை, ஜூலை 10
கடந்த வியாழன் முதல் உண்ணாவிரதமிருந்து வந்த பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் இராம்தாஸ் நேற்று அதனை கைவிட்டார்.

தமிழ்நாடு முஸ்லிம் லீக் தலைவர் அப்துல் ஸமது கொடுத்த இளநீரை அருந்தி டாக்டர் இராம்தாஸ் உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டார்.

பாட்டாளி மக்கள் கட்சி எம். எல். ஏ. பண்ருட்டி இராமச்சந்திரன் சட்டசபையில் வைத்து தாக்கப்பட்டதை ஆட்சேபித்து இந்த உண்ணாவிரதத்தை டாக்டர் இராம்தாஸ் ஆரம்பித்திருந்தார் என்பது தெரிந்ததே.

தமிழ்நாடு சட்டசபைக் கூட்டத்தில் பண்ருட்டி இராமச்சந்திரன் அவமதிக்கப்படமாட்டார் என்று முதலமைச்சர் உறுதி தரும் வரை பண்ருட்டி இராமச்சந்திரன் சட்டசபைக் கூட்டத்தில் கலந்துகொள்ள மாட்டார் என்று டாக்டர் இராம்தாஸ் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

## ஷெல் வீச்சு

யாழ்ப்பாணம், ஜூலை 10
காரைநகர் முகாமிலிருந்து நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் பொன்னலைப் பகுதியை நோக்கி ஷெல் வீச்சுக்கள் நடத்தப்பட்டன.

பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் ஆலய வளவினுள்ளும் மற்றும் பக்கத்து குடியிருப்புக்களிலும் ஷெல்கள் விழுந்து வெடித்தன. சேதம் ஏதும் ஏற்படவில்லை.

நேற்று முன்தினம் பலாலி இராணுவத்தினரும் தொண்டமானாறு பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தினர். [ஒ-15]

## ஒலிம்பிக்கில் தெ. ஆபிரிக்கா

லண்டன், ஜூலை 10
சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனத்தில் தென்னாபிரிக்கா மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

தென்னாபிரிக்க அரசின் கடும் நிற வெறிக் கொள்கையினால் அது கடந்த காலங்களில் ஒலிம்பிக் சம்மேளனத்திலிருந்து விலக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (ஒ-5)

## கூட்டுறவு கடைகளில் சீனி தே. எண்ணை

யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்க கிளைகளில் பங்கீட்டு முறையில் இன்று முதல் சீனி, தேங்காய் எண்ணெய் ஆகியன வழங்கப்படவுள்ளன.

சீனி ஒரு கிலோ 36 ரூபாவாகவும், தேங்காய் எண்ணெய் லீற்றர் 45 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படும். (ஒ-3)

## பீரங்கித் தாக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 10
ஊர்காவற்றுறை, காரைநகர் கடற் பிராந்தியத்திலிருந்து நேற்று இரவு 7 மணியளவில் ஸ்ரீலங்காப் படையினர் பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர்.

சேத விவரங்கள் குறித்து தெரியவரவில்லை. (ஒ-15)

# மரண அறிவித்தல்கள்

### பொன் கணேசன் B. A. [Dip. in Ed.]
[முன்னாள் கோட்டக்கல்வி அதிகாரி, வடமராட்சி - E.O.]

கரவெட்டி மத்தியைச் சேர்ந்த பொன் கணேசன் நேற்று [9-7-91] காலமானார்.

இவர் பூபதியின் அன்புக் கணவரும், கௌரி, சௌந்தரி [B.Sc.] ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. பொ. மகாதேவன், திரு. பொ. பாலச்சந்திரன் [அதிபர், யா / மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி], திரு பொ. சோமசுந்தரம் [லண்டன்] ஆகியோரின் சகோதரரும், பாலசிங்கம் [பிரான்ஸ்], சிவானந்தம் [B.Sc.] ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று மாலை 4-00 மணிக்கு சோனப்பு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. பாலச்சந்திரன்
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.
[17436]

### திருமதி சுப்பிரமணியம் நவமணி

வண்ணார்பண்ணை கேசாவில் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த சுப்பிரமணியம் நவமணி 6-7-91 இரவு காலமானார்.

இவர் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், லோகநாதன் [யாழ். மாநகரசபை பிரதம மின்மானி வாசிப்பாளர்], கனகேஸ்வரி, ஏகாம்பரநாதன் [சோலைவரிப்பகுதி நடுக்கட்டு உத்தியோகத்தர் யாழ். சாரணர் சங்க உ. மா. ஆ. சே], தேவிபநாதன், ருக்குமணிதேவி [யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயம்], நாகேஸ்வரி, குகநாதன் ஆகியோரின் தாயாரும், தியாகராசா [மெக்கானிக்], புஸ்பராணி, தேவராணி, யோகமலர், பாலகிருஷ்ணன் [உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கச்சேரி யாழ்ப்பாணம்] பூபாலசிங்கம் ஆகியோரின் மாமியாரும் பூமணியின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [10 - 7 - 91] நடைபெறும் என ஏற்கனவே நேரடியாகவும் உறவினர் மூலமாகவும் அறிவித்திருந்த போதும் சில தவிர்க்க முடியாத காரணத்தினால் நாளை [11-7-91] பிற்பகல் 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் ஈமக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்,

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சு. லோகநாதன்
41, கேசாவில் பிள்ளையார் கோவிலடி,
வண்ணார்பண்ணை,
[17266]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி [illegible] கத்தில் உள்ள அச்சகத்தில் 10 - 07 - 1991 இல் [illegible] வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org